# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மார்ச் 02, 2024 Weekly E-paper ● March 02, 2024




# என்றும் வாழ்வார் தளபதி!

சுப.வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## பரிசு கேட்கிறார் முதல்வர்!

தலையங்கம்

## வடக்கில், மோடி வித்தை காட்டலாம்! தெற்கில், மோடிக்குத்தான் வித்தை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மார்ச் 02, 2024 Weekly E-paper ● March 02, 2024


## என்றும் வாழ்வார் தளபதி!

முடிந்தது கலைஞ ரோடு
முதுபெரும் இயக்கக் கொள்கை
படிந்தது தமிழர் நாட்டில்
பார்புகழ் திராவி டந்தான்
இடிந்தது கழக ஆட்சி
என்றெலாம் நினைத்தோர் வீழ
விடிந்தது ஸ்டாலின் ஆட்சி
விரிகதிர் வெளிச்சம் எங்கும்!

ஆட்சியைத் தொட்ட போதே
ஆயிரக் கணக்கா னோர்கள்
மீட்சியே இல்லா நோயால்
மெலிந்துளம் நொந்தி ருந்தார்
காட்சியில் எளிய னாகிக்
கலங்கிடா நெஞ்சத் தோடு
மாட்சிமை நிறைந்த எங்கள்
தளபதி களம்பு குந்தார்!

நோயினை விரட்டி நாட்டில்
நூலோரும் போற்றும் வண்ணம்
தாயினைப் போலே நாளும்
தளபதி தொண்டு செய்தார்
போயின பழைமை யாவும்
புதுப்புதுத் திட்டம் கண்டார்
வாயெலாம் வாழ்த்த நெஞ்சம்
வாழ்த்திட வாழ்வார் என்றும்!



சுப.வீரபாண்டியன்

# மேட்டுப்பாளையம்: பேரவை ஆர்ப்பாட்டம்!



ஒன்றிய பாஜக பாசிச அரசைக் கண்டித்து, கோவை மேட்டுப்பாளையத்தில் 25/02/2024 ஞாயிற்றுக்கிழமையன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் பாபு தலைமை தாங்கினார். மக்கள் பாடகர் தோழர் கன்னையா திராவிட இயக்க எழுச்சிப் பாடல்களையும், ஆர்எஸ்எஸ், பிஜேபிக்கு எதிரான பாடலையும் பாடினார். கோவை மாவட்டச் செயலாளர் தோழர் கோவிந்தராஜன், தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர் சந்திரசேகரன், திராவிடர் கழகத் தோழர் தங்கராசு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் சரவணபெருமாள் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர். திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் காசு. நாகராசன், மோடியின் ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிரான விளக்கச் சிறப்புரையாற்றினார். மோடியின் ஒன்றிய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை அடுத்து தோழர் தம்புராஜ் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது. ●

# வடக்கு மண்டல அமைப்புக் கூட்டம்!





திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் வடக்கு மண்டல அமைப்புக் கூட்டம் 25-02-2024 அன்று சென்னைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் தோழர் சிற்பி செல்வராஜ் தலைமையில், அமைப்புச் செயலாளர் தோழர் புலேந்திரன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை நிலையச் செயலாளர் தோழர் எட்வின் வரவேற்புரை ஆற்றினார். மறைந்த அய்யா கயல் தினகரன், அம்பத்தூர் பெரியார் திராவிடர் கழகத் தோழர் ஏழுமலை ஆகியோருக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து வடக்கு மண்டலப் பொறுப்பாளர்கள் தங்களின் ஆலோசனைக் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். துணைப் பொதுச் செயலாளர் தோழர் உமா ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி மாவட்டங்கள் தோறும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி தி.மு.கழகக் கூட்டணிக்கு வலிமை சேர்க்கவேண்டும் உள்ளிட்ட திட்டங்கள் வலியுறுத்தப்பட்டன. இக்கூட்டத்தில் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டின் அவர்கள் பார்வையாளராக வந்திருந்தார். நிறைவாகச் சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் திராவிட மணி நன்றி கூறினார். ●

## மதுரையில் பேரவைக் கலந்துரையாடல் கூட்டம்

மதுரை மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவைக் கலந்துரையாடல் கூட்டம் 23.02.2024 அன்று மாலை, மாநில அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் செயபால் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் மா.கருப்பையா முன்னிலை வகித்தார். துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து கருத்துரையாற்றினார். கூட்டத்தில் எதிர் வரும் 10.03.2024 அன்று பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் தலைமையில் மதுரையில் நடைபெற இருக்கும் தென்மாவட்ட கலந்துரையாடல் கூட்ட ஏற்பாடுகள் குறித்தும், அதே நாள் மாலை பொதுச்செயலாளர் பங்கேற்கும் நூல் அறிமுகக் கருத்தரங்கம் நடத்துவது குறித்தும், மதுரை அரசு மருத்துவமனை வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்குத் தலைவர் கலைஞர் பெயர் சூட்டுமாறு மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சரிடம் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் மூலம் கோரிக்கை வைப்பது உள்ளிட்டவைகள் குறித்து விவாதித்துத் தீர்மானங்களாக நிறைவேற்றப் பட்டன. மாவட்டச் செயலாளர் பி.அமர்நாத் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பேரவை பொறுப்பாளர்கள் மருத்துவர் சந்திரன், ஸ்டுடியோ சரவணன், சொக்கலிங்கம், பெரியார் மருது, பகலவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர் ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!
# கருஞ்சட்டைத் தமிழர்

## பரிசு கேட்கிறார் முதல்வர்!

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் 71ஆம் பிறந்தநாளில் அவருக்கு நம் நெஞ்சார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் நம் முதல்வர் தன் பிறந்த நாளுக்குப் 'பரிசு' கேட்கிறார். அதுவும் மக்களிடம் இருந்து பரிசு கேட்கிறார்.



என்ன பரிசு? அவரே சொல்கிறார்...

'மத்தியில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துங்கள். அதுவே, நீங்கள் எனக்குத்தரும் பிறந்த நாள் பரிசு.'

அடடா! இப்படியும் ஒரு தலைவரா? தன் பிறந்நாளின் மகிழ்வைவிட மக்களின் மகிழ்ச்சியே பெரியது, மக்களின் நலமே முக்கியம் என்றல்லவா கருதுகிறார் முதல்வர்!

இன்றைய ஒன்றிய அரசின் ஆட்சியில் விலைவாசிகளின் கட்டுப்பாடு இல்லா உயர்வு, எரிபொருள்களின் விலையேற்றம், ஜி.எஸ். டி. என்ற பெயரில் ஒன்றியத்தின் சுரண்டல், மாநில உரிமைகளைப் பறிப்பதும் - அழிப்பதும், சாதிய-இன-மத வெறிகளைத் தூண்டுவது போன்ற மக்கள் விரோதச் செயல்களால் மக்கள் நிம்மதி இழந்து கொண்டு இருக்கிறார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் ஒன்றிய அரசு ஒரு பாசிச அரசு.

இன்னும் 100 நாள்களில் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் பா. ஜ. க. வெற்றி பெற்றால் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுமா என்பது கூட சந்தேகம்தான்.

அதனால்தான் மக்களின், நாட்டின் நலனில் அக்கறை காட்டும் நம் முதல்வர் ஒன்றிய அரசின் ஆட்சி மாற்றத்தைப் பரிசாகக் கேட்கிறார்.

மக்களிடம் சொல்லுங்கள் முதல்வர் கேட்கும் பரிசை.

'இந்தியா கூட்டணி வெற்றி' என்ற பரிசோடு அன்று மீண்டும் வாழ்த்துவோம்.

அதற்குப் பாசிச பா.ஜ.கவைத் தோற்கடிப்போம், வரும் தேர்தலில்!




ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# வடக்கில், மோடி வித்தை காட்டலாம்! தெற்கில், மோடிக்குத்தான் வித்தை!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

இரண்டு நாள் பயணமாகத் தமிழ்நாடு வந்த பிரதமர் மோடி, பல்லடம் மற்றும் திருநெல்வேலியில் நடைபெற்ற பா.ஜ.க பொதுக்கூட்டங்களிலும், தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு விழாவிலும், மதுரையில் நடைபெற்ற தொழிலதிபர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். ஏற்கனவே டிசம்பரில் ஒரு முறையும், ஜனவரியில் ஒரு முறையும் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளார். “யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே” என்பதற்கேற்ப நாடாளுமன்றத் தேர்தல் வர இருப்பதால் தான் பிரதமர் தமிழ்நாட்டிற்கு மாதம் ஒருமுறை வந்து கொண்டிருக்கிறார்.



டிசம்பரில் சென்னையிலும், தென் மாவட்டங்களிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு ஒன்றிய அரசின் சார்பில் நிவாரணமாக இதுவரை ஒரு பைசா கூட கொடுக்கப்பட வில்லை. இது குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் தி.மு.க கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் வலியுறுத்திய போது 27.01.2024 அன்று நிதி வழங்கப்படும் என்று உறுதியளித்தார். அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து, தமிழ்நாடு வரும் மோடி நிதி ஒதுக்கீடு செய்வார் என்று எதிர்பார்த்த நிலையில் அப்படி எதுவும் நடக்கவில்லை.

பா.ஜ.க பொதுக்கூட்டங்களில் பேசிய மோடி முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் ஜெயலலிதா ஆகியோரை வெகுவாக புகழ்ந்தார். இருவரும் மிகச் சிறப்பாக ஆட்சி நடத்தியதாகப் பாராட்டினார். ஊழல் செய்து வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து குவித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை உச்சநீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளியைப் பாராட்டிப் பேசும் பிரதமர் மோடிக்கு இந்தியா கூட்டணியை ஊழல் கூட்டணி என்று சொல்ல என்ன தகுதி இருக்கிறது? சி.ஏ.ஜி அறிக்கையில் 7.5 லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளதாகக்குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரதமர் மோடி, ஊழல் குற்றவாளியைப் புகழ்வதில் வியப்பில்லை தான்.

ஆளில்லாத சொத்தை அபகரிக்க நினைப்பது போல் அ.இ.அ.தி.மு.கவின் வாக்கு வங்கியைக் குறிவைத்து முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் ஜெயலலிதா மீது பாசத்தைப் பொழிந்திருக்கிறார் பிரதமர் மோடி. இந்தப் பசப்பு வேலைக்குப் பகுத்தறிவு மண்ணில் எவரும் பலியாக மாட்டார்கள்.

ஒன்றிய அரசின் திட்டங்களைத் தி.மு.க தமிழ்நாட்டில் மறைத்து விட்டதாகக் குற்றம் சாட்டிய பிரதமர் மோடியால் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கு அவரது அரசு வழங்கிய நலத்திட்டங்களைப் பட்டியலிட முடியவில்லை. ஒரு வேளை அதையும் அவருக்கும் தெரியாமல் தி.மு.க தான் மறைத்து விட்டதோ, என்னவோ!

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தி.மு.க இருக்காது என்று ஆவேசமாகப் பேசியிருக்கும் பிரதமர் மோடிக்குத் தி.மு.கவின் தியாக வரலாறு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மாநில உரிமைக்காகப் பண்டிதர் நேரு உள்ளிட்ட மாபெரும் தலைவர்களையே எதிர்த்துக் களம் கண்ட இயக்கம் தி.மு.க. 2001 அக்டோபர் முதல் 2014 மே வரை குஜராத்தின் முதல்வராக இருந்த பிரதமர் மோடி 12 முறை விடுதலை நாள் விழாவில் தேசியக் கொடியை ஏற்றியுள்ளார். அவருக்கு அந்த உரிமையை பெற்றுத் தந்த இயக்கம் தி.மு.க தான் என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. தி.மு.கவை அழித்து விடுவேன் என்று கிளம்பிய அனைவரும் அரசியல் களத்திலிருந்து காணாமல் போய் இருக்கிறார்கள். இன்னும் மூன்று மாதங்களில் பிரதமர் மோடியும் அந்த வரிசையில் இணைவார்.

மாதம் ஒரு முறை அல்ல மாதக் கணக்கில் இங்கேயே தங்கினாலும் மோடி வித்தைக்கு மயங்காமல் அவருக்குப் படுதோல்வியைப் பரிசளிக்கும் தமிழ்நாடு! ●




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian